விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 கார்த்திகை 28 ரபி-அவ். 19 இதழ் 299
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 13-12 84

## "இந்தியாவுக்கு இலங்கைமீது படையெடுக்கும் எண்ணமில்லை!"

### பிரதமர் ரஜீவ் காந்தி கூறுகிறர்

அமெதி, டிச 13

''இலங்கைமீது இந்தியா படையெடுக்குமென்பது ஒரு அர்த்தமற்ற பேச்சாகும் அப்படி ஒரு எண்ணம் இந்தியாவுக்கு இல்லை'' என்று இந்திய பிரதமர் திரு. ரஜீவ் காந்தி கூறியுள்ளார்.

திரு காந்தி உத்தரப்பிரதேஷ் மாநிலத்துக்கு தேர்தல் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அங்கு அவரிடம் இலங்கை விவகாரம் பற்றிக் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு அவர் கூறினர்.

இந்தியத் தேர்தல் முடிவடைந்த பின்னர் இலங்கை மீது படையெடுக்கும் எண்ணம் உண்டா? என்று அவரிடம் கேட்கப்பட்டிருந்தது.

இக்கேள்விகுப் பதிலளித்த போதே திரு. ரஜீவ் காந்தி ''இலங்கைமீது இந்தியா படையெடுக்கும் என்பது ஒரு அர்த்தமற்ற பேச்சு அப்படி ஒரு எண்ணத்தை இந்தியா கொண்டிருக்கவில்லை 'என்று கூறினர்.

அவர் மேலும் இலங்கை இனப்பிரச்னைக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டுமெனவும் இந்தியா அத்தீர்வையே வலியுறுத்துகின்றதெனவும் கூறினர்.

### சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது 750 பயங்கரவாதசந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

### அமிர்தலிங்கம் கூறுகிறர்

# "அமர்ந்திருந்து பேசும் நிலையில் இப்போது நாம் இல்லை!"

(நமது நிருபர்)

**வடபகுதி முழுவதும் முற்றுகையிடப்பட்டுள்ள சூழ்நிலையில் அமர்ந்திருந்து பேசுகின்ற நிலையில் தாம் இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.**

நாளை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் கூட்டணி கலந்து கொள்வது குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லையென்று தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், ஜனதிபதிக்கும் கூட்டணிப்பிரதிநிதிகளுக்குமிடையே இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் பலனைப் பொறுத்தே முடிவெடுக்கப்படுமென்றும் கூறினர்.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஜனதிபதி தெரிவித்துள்ள மாகாண சபை அமைக்கும் யோசனைகளை கூட்டணி ஏற்றுக்கொள்ளாது என்று தெரிவித்த அவர்; வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்ததாக மாநில சுயாட்சியை தவிர வேறு எதனையும் கூட்டணி ஏற்றுக் கொள்ளாது என்று தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியான சபைகளை அமைப்பது குறித்த ஜனதிபதியின் கருத்தி... 
(4-ம் பக்கம் 4ம்கலம் பார்க்க)

### கான்ஸ்ரபிளும் கைதானர்!

(யாழ்ப்பாணம்)

சுழிபுரத்தில் ஆயுதப்படையினர் நடத்திய தேடுதல் வேட்
(4ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்!

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு முன்னல் சுமார் இருநூறுக்கு அதிகமானோர் விண்ணப்பப் பத்திரம் பெற சைக்கிளில் வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

கடந்த 10-ம் திகதி விண்ணப்பப்பத்திரம வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சைக்கிள் உரிமையாளர்கள், ...
(4-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க

### ✯ 17 மாட்டு வண்டியில் வந்த பெற்றேர்

## கைதடி தாய்மார் கச்சேரியில் மறியல்!

(யாழ்ப்பாணம்)

கைதடியில் கைதான சுமார் 200 இளைஞர் சிறுவர்களின் தாய்மார்கள், சகோதரிகள் கடந்த திங்கட்கிழமை காலை யாழ். கச்சேரி வாசலில் சுமார் 5 மணிநேரம் மறியல் செய்தனர்

கைது செய்யப்பட்ட தங்கள் அப்பாவி பிள்ளைகளை விடுதலை செய்துதருமாறு அவர்கள், யாழ் அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கத்திடம் கோரினர்கள்.

கைதடியிலிருந்து 17 மாட்டு வண்டில்களில் இவர்கள் கச்சேரிக்கு வந்திருந்தனர்,

இத்தாய்மார்கள் சார்பில் அரசாங்க அதிபரைச் சந்தித்த சாவகச்சேரி முன்னுள் எம். பி திரு, வி. என் நவரத்தினம், கூட்டணி உறுப்பினர் திரு. ஏ.
[4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## வடக்கு சம்பவங்கள்: 'அமிர்' கண்டனம்!

(கொழும்பு)

ஜனதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தனவை தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சந்தித்து, வடபகுதி அப்பாவிமக்கள் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்படுவது குறித்து தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தார்

ஊரடங்குச்சட்ட நேரத்தில் வீடுகளுக்குள்புகுந்து அப்பாவி மக்களை அழைத்துச் சென்று, அவர்களைத் துன்புறுத்துவதாகத் தமக்குக்கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன என்றும், இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும்படியும் அமிர்தலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்

வடக்கில் நடக்கும் சம்பவங்களினல் மக்களின் அன்றுட வாழ்க்கைசீர்குலைந்துவிட்டதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

## யாழ். நீதிமன்றங்கள்: ஸ்தம்பிக்கும் நிலை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதிமன்றங்கள் விசாரணை நடைபெருமல் ஸ்தம்பிக்கும் நிலை உருவாகியுள்ளது

ரிமாண்ட் கைதிகள், பொலிசார் சட்டத்தரணிகள், சாட்சிகள் வராததினல் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை நீதிபதிகளும், சில சட்டத்தரணிகள் மட்டும் வந்திருந்தனர். இதனல் வழக்குகள் நிறுத்திவைக்கப்பட்டன. விசாரணைகள் நடைபெறவில்லை.

யாழ். சிறைச்சாலையிலுள்ள கைதிகள், றிமாண்ட் கைதிகள் யாவரும், கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு
(4ம் பக்கம்4ம் கலம் பார்க்க)

## எம்.ஜி.ஆருக்கு புதன்கிழமை மாற்று சத்திர சிகிச்சை!

(நியூயோர்க்)

நியூயோர்க் புறூக்ளின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரனுக்கு வருகிற புதன்கிழமை மாற்று சிறுநீரகம் பொருத்தப்படும்.

இத்தகவலை முதலமைச்சின் செயலாளர் திரு. பரமசிவம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முதல்வர் எம். ஜி. ஆரின் தேகநிலை பெரும் மேம்பட்டிருப்பதாகவும், பத்திரிகைகள், கடிதங்கள் படிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

### மானிப்பாயில் பெண் உட்பட இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் துப்பாக்கி சூட்டுக்கு பலியான இருவரின் சடலம், யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பைசேர்ந்தஆத்தின் (25வயது) வசந்தமலர் அல்லது மல்லிகா(22வயது) ஆகியோரே பலியானவர்களாகும்

இவர்கள் ஊரடங்கு உள்ள நேரத்தில் சுடப்பட்டதாக கூறப்படுகிறது.

இன்றுகாலை மரணவிசாரணைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [க]

# இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு!

## அமெரிக்கதூதர் வோல்டர்ஸ் கருத்து

(புதுடில்லி)

அமெரிக்காவின் விசேட தூதுவர் ஜெனரல் வேர்ணன் வோட்டர்ஸ் இலங்கையின் இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு காணமுடியாதென்று புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

இந்திய உயரதிகாரிகளுடன் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாகப் புதுடில்லியில் ஜெனரல் வேர்ணன் வோட்டர்ஸ் நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வுகாணப்படவேண்டியது அவசியம் என்றும் அமெரிக்காவின் விசேடதூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

இவர்நேற்று இந்தியாவின் வெளிவிவகார செயலாளர் திருரத்கோத்ராவைச்சந்தித்து 45நிமிடங்கள் உரையாடினர். இச்சந்திப்பின்போது இலங்கையின் இனப்பிரச்னை பற்றி முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

இந்திய அரசின் கொள்கை வகுக்கும் திட்டக்கமிட்டியின்
(4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு சென்ற தமிழ் இளைஞர்களுக்கு

# புறக்கோட்டையில்

## விசித்திர அனுபவம்!

[கொழும்பு]

மேற்கு ஜெர்மனிக்குச் செல்ல விருந்த சில தமிழ் இளைஞர்களுக்குப் புறக்கோட்டை பஸ் நிலையத்தில் விசித்திர மான அனுபவமொன்று காத்திருந்தது.

இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையம் செல்வதற்காக புறக்கோட்டையிலுள்ள மத்திய பஸ் தரிப்பு நிலையத்திற்குச் சென்றுள்ளனர். இவர்களைக் கண்ட பஸ் ஊழியர்கள் பலரும் தீவிரவாதச் சந்தேக நபர்களெனச் சந்தேகம் கொண்டு அவர்களைச் சூழ்ந்து கொண்டனராம். பலரும் பல விதமான கேள்விகளையும் கேட்டுத் துன்புறுத்தியது மட்டுமின்றி அவர்களிடமிருந்த தஸ்தாவேஜுகளையும் சோதனையிட்டனராம். பின்னர் புறக்கோட்டைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் வந்து இளைஞர்களையும் மற்றவர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர்.

இளைஞர்களிடம் பாஸ்போர்ட், பிரயாணப் பத்திரங்கள் போன்ற சகல விடயங்களும் முறையாக இருப்பதைக் கண்டு அவர்களை விடுதலைசெய்ததுடன், அவசியமில்லாமல் தொந்தரவுசெய்துள்ள பஸ் நிலைய ஊழியர்களையும் கண்டித்துள்ளனர்.

தம்மிடமிருந்த 120 அமெரிக்க டாலர்களை இழந்த நிலையில் இளைஞர்கள் பிரயாணத்தை மேற்கொண்டனர்.

கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த மு. தவரூபன். துரைராசா புவனேஸ்வரன், உடையார் ஒழுங்கை பொ. சந்திரேஸ்வரன், உடுவில் சிவபாலசிங்கம் சுகுன அபிலன், நாமகள் வீதி சு. பாலரூபன் ஆகியவர்களே அந்த இளைஞர்கள். இவர்களுடன் அப்பாத்துரை நகுலேஸ்வரன் என்பவரும் சென்றிருந்தாராம்.

# தென்பகுதியில்

## டாக்டர்கள் பலர் 'லீவு'!

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதி வைத்தியசாலைகளிலிருந்து பல டாக்டர்கள் தற்போதைய பதட்ட நிலை காரணமாக லீவில் சென்றுள்ளனர். இதனால் அப்பகுதி வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமது பாதுகாப்புக் கருதியே பலடாக்டர்களும் தாதிகளும் தெற்கிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. இவர்கள் லீவிலேயே சென்றுள்ளனர்.

பதுளை, கொழும்பு, நுவரெலியா, கண்டி ஆகிய இடங்களில் பலர் வெளியேறியுள்ளதாவும் மேலும் பலர் லீவுக்கு விண்ணப்பித்திருப்பதாகவும் கூறப்பட்டது

இவ்வாறு வெளியேறியவர்களில் பலர் தமிழ் டாக்டர்கள் என்றும் தெரிய வந்துள்ளது சுகாதார சேவைத் திணைக்களம் இந்த நிலைமை குறித்து அதிருப்தயும் பாதிப்படைந்திருப்பதாகவும் கூறப்பட்டது. (கி)

மட்டு சிறைஉடைப்பில் தப்பிய

## பிரபல கேடி சந்திரன்

# சுடப்பட்டு மரணம்!

(மட்டக்களப்பு)

கடந்த வருடம் மட்டக்களப்பு சிறை உடைப்பில் தப்பிச்சென்ற பிரபல கேடியான சந்திரன் என்ற கைதி பொலிசாரினால் சுடடுக்கொல்லப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு மட்டக்களப்பு பொலிசாருக்கும் இக் கேடியின் கூட்டத்தவருக்குமிடையே துப்பாக்கிச சண்டையொன்று இடம் பெற்றது. இச் சண்டையிலேயே அப்பிரபல கேடி கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது

கடந்த சனிக்கிழமை இரவு 7-30 மணியளவில் ஏறுவூரில் உள்ள புன்னைக்குடா என்னுமிடத்தில் சுது ஐயா என்பவரது வீடு கொள்ளையிடப்பட்டது

கேடி சந்திரனும் அவரது வேறு மூன்று சகாக்களும் இக் கொள்ளையிலீடுபட்டு தங்க நகைகள் உட்பட ரூபா 10,750 பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர் இது பற்றிப் பொலிசாருக்குப் புகாரிடப்பட்டது.

பொலிஸார் தேடுதலில் இறங்கிய போது ஏறுவூர் நாவலடிச்சந்தி என்னுமிடத்தில் கடை உடைபொன்று நிகழுவதாக இரவு 12 மணியளவில் தகவல் கிடைத்தது.

ஸ்தலத்துக்குவிரைந்தபோது பொலிசார் மீது துப்பாக்கிபிரயோகம் நடத்தப்பட்டது இதற்குப் பதிலடி கொடுத்த போதே மட்டக்களப்பு சிறை உடைப்பில் தப்பிய கேடி சந்திரன் செல்லப்பட்டார் இவருடன் நின்ற ஏனைய கொள்ளையர்கள் தப்பிச் சென்று விட்டதாகக் கூறப்பட்டது.

தப்பிச் சென்ற மூவரும் முஸ்லிம் இளைஞர்களெனறும், அவர்களிடம் இரு துப்பாக்கிகளும்' சுமார் 40 தோட்டாக்களும் இருந்திருக்கலாம் எனவுப பொலிசார்கருதுகின்றனர்

கொல்லப்பட்ட கைதி சந்திரனின் சகவான்ஸ்ரீ என் வர் ஏறுவூர் பொலிஸாரினல் கடந்த மாதம் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார் அப்போது இடம் பெற்ற துப்பாக்கிசமரில் கேடி சந்திரன் காயமடைந்த நிலையில் தப்பிச் சென்றதாகவும் கூறப்பட்டது

ஏறுவூர் பொலிசாருடன் மட்டக்களப்பு பொலிஸ் அதிரடிப்படையினரும் நேற்று முன்தினமிரவு சந்திரனைமடக்குவதில் இறங்கியிருந்ததாக கூறப்பட்டது. (கி)

## அரசியலைத் துறக்க அமைச்சர் விருப்பம

[கொழும்பு]

அரசியலைத் துறந்துவிட்டு இறை பணிசெய்ய மனம் தூண்டுவதாக பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு செல்லையா ராசதுரை கூறியுள்ளார்

உனுப்பிட்டியில் நடந்த சமய நிகழ்ச்சியொன்றில் பேசும்போதே அமைச்சர் இதனைக் கூறினர்.

# வடபகுதி சம்பவம்:

## தொண்டமான் அதிர்ச்சி

(கொழும்பு)

''வட பகுதியில் கைது செய்யப்பட்டவர்களில் பெரும் பான்மையினர் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களாவர். இவர்கள் கடந்த வருடம் இடம் பெற்ற ஜூலைக் கலவரங்களையடுத்து இப்பகுதிகளில் குடியேறியவர்களாவர்''

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனுதிபதி திரு .ஜே .ஆர். ஜெயவத்தனுவிடம் சமர்ப்பித்த மகஜரில் அதிர்ச்சி தெரிவித்துள்ளது

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு இராணுவத் தீர்வு காணுவதை விடுத்து அரசியல் தீர்வுகாணவும்.

''வடபகுதியில் அப்பாவி மக்கள் தாக்கப்படுவதையும் கொலை செய்யப்படுவதையும் தடுத்து நிறுத்தவும்''

## சிரமத்தின் மத்தியிலும் உணவுவிநியோகம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கக் கிளைகளுக்கு பல சிரமங்களின் மத்தியில் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப் பட்டுவருகிறது.

கடந்த 7ம், 8ம் திகதிகளில் உணவுப் பொருட்கள் சங்கக் கிளைகளுக்கு விநியோகிக்கப் பட்டது உணவு முத்திரைகளும், கையிருப்பிலுள்ள உணவுப் பொருள்களும் பாவனையாளர்களுக்கு கிளைகள் மூலமும் உத்தரவுபெற்ற கூப்பன் கடைகள் மூலமும் வழங்கப்பட்டன.

கடந்த 10ம் திகதி ஈழநாடுபத்திரிகையில் வெளியான செய்தியில் கிளைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது என்பது இளைஞர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது என்று தவறுக இடம்பெற்றுவிட்டது.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் வரவு செலவுத் திட்டம்–1985

1985ஆம் ஆண்டிற்குக் கிடைக்க்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 1984ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252, 212(பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

சீ. வீ கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04-12-1984 (978)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் முதல் உப வரவு செலவுத் திட்டம் 1984

1984ம்ஆம் வருடத்திற்குரிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் முதலாவது உபவரவு செலவுத்திட்டம், 1984ஆம் ஆண்டு மார்கழி மாதம் 12ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயய 252, 214(2) (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
04-12-1984. (977)

## ஜீப்வண்டி சாரதியுடன் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாலையடி வட்டையில் அரசஜீப்வண்டியொன்று கடந்த சனிக்கிழமை காலை அதன் சாரதியுடன் கடத்திச்செல்லப்பட்டுள்ளது.

இந்த ஜீப்வண்டி நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமானதாகும். சில துப்பாக்கி இளைஞர்களே இதனை இதன் சாரதியுடன் கடத்தியுள்ளனர். இதுவரை சாரதியும் ஜீப்பும் கண்டுபிடிக்கப் படவில்லை.

வெள்ளாவெளிப் பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர் (கி)


வரி விளம்பரம்

WANTED

Wanted on Lea e or for Purchase Small Industry or Work shop 976 C/o Eelanadu. 976

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 86 ஸ்ரீ YAMAHA Y B 80 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சுந்தர குமார் 'பத்ம கிரி' கட்டுடை மானிப்பாய். 979

வகுப்புகள்

வைகாசி 1986 London Engineering Council part I [A / L இரு விஞ்ஞான சித்திகள்] part II [B. Sc Engin-sering சமன்] City and Guilds Electrical, Quantity Surveying, Draughtsman ship [ஆறு மாத அட்வான்ஸ், ஒரு வருட தொடங்கினர் பயிற்சிகள்]; மூன்று வருட B. Sc Computer Science பரீட்சைகளுக்கான முழு நேர வார [Coure worke உட்பட] வார இறுதி வகுப்புகள் தை 1985 திறமை, அனுபவ சாட்டட் பொறியியல் விரிவுரையாளர்களையும் வருடா வருடம் சிறந்த பெறு பேறுகளையும், இலண்டனல் இலங்கையில் அங்கீகரிசகப் பட்ட ஒரே நிறுவனமாகிய Jast ஆல் 31-12-1984 முன் விண்ணப்பிக்கவும் தொடர்பு: உயர்கலைக் கல்லூரி, ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம். 963


## பாதிக்கப்பட்ட ஆசிரியர்க்கு ஜனவரியில் இடமாற்றம்!

### ஆசிரியர்காங்கிரஸ்செயலாளர் சிவஞானம் தகவல்

(கொழும்பு)

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் பலருக்கு ஜனவரி முதல் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தனித்தனி அறிவிக்கப்பட்டுள்ளது

இலங்கை ஆசிரியர்காங்கிரஸ் பொதுச் செயலாளர் க சிவஞானம் இதுபற்றித் தெரிவிக் (4ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]




"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

இன்று பாரதியார் ஜயந்தி தினம்

உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்பாம்

உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவு கொடுப்போம்.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 10 அல்லது 2 நீம் சோப் மேலுறைகளை அனுப்பி ஒரு அழகிய இந்திராகாந்தி ஸ்ரிக்கரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்—யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சிவசுப்பிரமணியம்

காரைநகர் சி. மூ. கேணியடியைச் சேர்ந்த இராமலிங்கம் சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்றவர் தபால் திணைக்களம்) 9-12 84இல் காலமானுர் இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவராமலிங்கம் (Bahrain), சிவமணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார் நல்லடக்கம் 10-12-84இல் சாம்பலோடை மயானத்தில் நடைபெற்றது.

974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 11-12-84 ஹன்டி பேரின்பநாயகம் தினம்

## உள்ளத்தால் மிக உயர்ந்தோன்

காந்தியார் நெறிநின்றே பணிகள் செய்தோன்
கல்வியினுல் இவ்வுலகம் வியக்க வாழ்ந்தோன்
சாந்தமே வடிவானேன் தமிழர் சால்பே
தன் வாழ்வு என வாழ்ந்த சான்ருேன் ஆவான்

ஆங்கிலத்தில் மிகவல்லோன் தமிழில் வல்லோன்
அற்புதமாய்ச் சொற்பொழிவை நிகழ்த்தும் தீரன்
தீங்குசெய்யும் சாதியெனும் நோயை மாற்றச்
சிறுவயது முதலாக முயன்ற நல்லோன்

ஹன்டியெனும் நாமத்தை உலகே போற்றும்
கற்ருேர்கள் இதயமெலாம் அதைநாம் காண்போம்
நன்றுபுரி சிந்தையினுல் எளிமை வாழ்வை
நாளெல்லாம் மேற்கொண்டோன் அவனே ஆவான்.

— ம. பார்வதிநாதசிவம்

# லிபியாவிலிருந்து துடிதுடித்து வந்தகடிதம்

# இரண்டுகால் ஒட்டகங்களாக இங்கு வேலை செய்கிருேம்!

லிபியாவிலிருந்து யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் 'ஈழநாடு'க்கு எழுதிய கடிதம் வருமாறு:-

சுளைசுளையாகப் பணம்சம்பாதித்து சொந்த ஊரில் 'கோட்டை' கட்டி விடலாம் என்ற எண்ணத்தோடு பெற்ருேரின் நகை காணிகளை ஈடுவைத்து லிபியாவுக்கு வந்தோம்! சுமார் 150 பேர் இலங்கையின் பலபகுதிகளிலிருந்தும் இங்கு வந்தோம்.

வந்த நாம் என்ன செய்கிருேம்?— நீங்களும் அறிய வேண்டாமா? துடிதுடித்து எழுதுகிறேன்— பகுதியிலுள்ளவர்களிடம் பணம் கட்டி வந்தோம்.

ஏழாலை தெற்கு இளைப்பாறிய ஆசிரியரிடம்;

தொண்டமானுற்றில் ஒருவரிடம்;

இருபாலைச் சந்தியில் ஒருவரிடம்;

ஆனைக்கோட்டையில் பெண்மணி ஒருவரிடம்;

கொழும்பில் உள்ள ஏசன்சி மூலம் 150 பேர் இங்கு வேலை வாய்ப்பு பெற்று வந்தோம். 150 பேரும் ஒவ்வொருவரும் 27,000 ரூபா வீதம் ஏஜன்சிக்கு கட்டி வேலைவாய்ப்புபெற்று வந்தோம். தமிழ் பகுதியான யாழ்ப்பாணத்தில் உள்ள சப் ஏஜன்சிகளான பின்வரும் ஏழாலைதெற்கு. தொண்டமனாறு இருபாலைச்சந்தியை சேர்ந்த விஜயன். ஆனைக் கோட்டையைச்சேர்ந்த பெண் மணி ஒருவர்.

**கொழும்பில் மூவர்**

லிபியா வந்து இங்கிலாந்து நாட்டை சேர்ந்த Indepen-tent Oil Services Limited என்ற கம்பனியிடம் அடிமைகளாகச் சேர்ந்தோம். 150 பேர்களும் உலகிலேயே பெரிய பாலைவனமான சகாராவில் மேல் கூறப்பட்ட கம்பனியின் இரண்டு கால் ஒட்டகங்களாக

(4-ம் பக்கம் ம்1கலம் பார்க்க)

# பாதுகாப்பு வலயம்: சட்ட விதிகள்

(முன் தொடர்ச்சி)

(1) பொலிஸ் இன்ஸ்பெக்டர் தரத்துக்குக் குறையாத ஒரு பொலிஸ் அதிகாரி, இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப் படையின் ஆணைபெற்ற ஓர் அதிகாரியின் கருத்தின்படி பாதுகாப்பு வலயத்துக்குள் ஏதாவது ஒரு பொருள் அல்லது சாமான் ஒரு தடையாகவுள்ளதென்ருல் அது தற்காலிகமானதா நிரந்தரமானதா என்பதைக் கருதாமல் அப்புறப்படுத்தலாம்.

(2) அவ்வாறு அப்புறப்படுத்தப்படுவதனுல் ஒரு நபர் ஓர் இழப்பினை நஷ்டத்தை அடைவானுயின், 1979ம் ஆண்டு 48ம் இலக்க பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அல்லது நடைமுறையிலுள்ள அவசர கால விதிகளை மீருதிருப்பானுயின் அதற்கான இழப்பீட்டினை தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து கோர உரித்துடையவராவர்.

(3) மேற்படி அதிகாரங்களை செயற்படுத்துவதிலிருந்துமேற்படி அதிகாரியை எவராவது தடை செய்தால் அல்லது இடையூறுசெய்தால் அவர் ஓர் குற்றம்புரிந்தவராவார்.

(1) ஒருவர் இந்த விதிகளின் கீழ் குற்றமிழைக்கநேரும் பொழுது ஒரு கட்டிடம், ஒரு வாகனம், ஒரு வளவு, அல்லது சாதனம் பயன்படுத்தப் பட்டுள்ளது என கருதுவதற்கு காரணமிருக்குமானுல் அக் கட்டிடத்தை, வளவை, வாகனத்தை, அல்லது சாதனத்தை சோதனையிட, கைப்பற்ற அப்புறப்படுத்த அல்லது தடுத்துவைக்கமுடியும். குற்றம்புரிந்தவரின் அவ்வாருன

(4ம் பக்கம் 2 ம்கலம் பார்க்க)

# பரந்தன் மக்களின் பெருந்தன்மை!

(யாழ்ப்பாணம்)

பரந்தன் குமரபுரம் பகுதி மக்கள் தமக்கு ஏற்படுத்தித் தந்த வசதிகள் குறித்தும், அவர்களின் பெருந்தன்மையையும் கடந்த வியாழக்கிழமை யாழ். தேவி ரயிலில் வந்து பரந்தனில் தங்க வேண்டிய நிலை ஏற்பட்ட பிரயாணிகள் வெகுவாகப் பாராட்டினர்.

கொழும்பிலிருந்தும், மற்றும் இடை வழியாலும் யாழ்ப்பாணம் நோக்கி வந்த பிரயாணிகளை யாழ்தேவி யாழ்ப்பாணம் செல்லாது, பரந்தனில் இறக்கி விட்டுத் திரும்பி விட்டது.

பரந்தன் ரயில் நிலையத்தில் இறங்கிய பிரயாணிகளை ரயில் நிலையத்தை விட்டு உடனடியாக வெளியேறிவிடுமாறு பணித்தனராம்.

என்ன செய்வதென்று தெரியாது தவித்த பிரயாணிகள் பரந்தன் வீதியில் இறங்கிய போது அவர்களுக்குக் கைகொடுத்து அணைத்துச் சென்ருர்கள் பரந்தன் குமரபுரம்மக்கள். அந்தரயிலில் வந்த சுமார் 1500 பிரயாணிகளையும் குமரபுரம்மகா வித்தியாலயத்திற்கு அழைத்துச் சென்றனர்.

ட்ராக்டர்களில் குமரபுரம் வித்தியாலயத்துக்கு அரிசி, தேங்காய், காய்கறிச் சாமான்கள் வந்து சேர்ந்தன. களைத்துச் சோர்ந்துவந்த மக்களுக்கு உணவு தயாரித்துவழங்கப் பட்டது.

பாடசாலையில் ஆண்கள் தங்க விடப்பட்டனர். பெண்கள் அங்குள்ள வீடுகளில் தங்குவதற்கு வசதிசெயப்பட்டது.

அடுத்தநாள் சொந்தக்காரரைப்போல உபசரித்து யாழ்ப்பாணத்துக்கு வழிஅனுப்பி வைக்கப்பட்டனர்.

கண்ணியமான முறையில் அவர்கள் அளித்தவசதிகளையும், உபசாரத்தையும் என்றுமே மறக்கமுடியாது என்று பிரயாணிகள் தெரிவித்தனர்

# குவைத் விமானக் கடத்தல் நாடகம் முடிவுற்றது!

## கடத்தல்காரர்கள் சரண்

தெஹறரான் டிச. 10

கடந்த ஆறுநாட்களகா இடம்பெற்றுவந்த குவைத் விமானக்கடத்தல் நாடகம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்விமானத்தில் பணயம் வைக்கப்பட்டிருந்தவர்களை ஈரானிய பாதுகாப்புப்படையினர் விடுவித்துள்ளனர் இந்த பாதுகாப்புப்படை அதிகாரிகள் மாறுவேடத்தில் சென்றே பணயக்கைதிகளை விடுவித்தனர்.

இதனையடுத்து கடத்தல்காரர்கள் சரணடைந்துள்ளனர். இக்கடத்தல் சம்பவத்தின்போது நான்கு பயணிகளை கடத்தல்காரர்கள் சுட்டுக் கொன்றது தெரிந்ததே.

இந்தகுவைத் விமானம் தெஹ்ரான் விமானநிலையத்தில் தரித்துநின்றது.

கடத்தல்காரர்கள் குவைத்தில் சிறைவைக்கப்பட்டுள்ள ஷியாம் முஸ்லிம்களை விடுதலை செய்யுமாறு குவைத் அரசாங்கத்திடம் கோரிக்கைவிடுத்திருந்தனர். (வெ)


**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

**றீகல் மினி**
10-00, 12-30
[12-30 மணிக்காட்சி 2 மணிக்கு முடிந்துவிடும்]
Bruce K. L LEE
BRUCE LEE FIGHTS BACK FROM THE GRAVE
[புறூஸ் லீ மீண்டும் தாக்குகிருர்-]
ஜேர்மன் மொழியில ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டது,

**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - லக்ஷ்மி
**ராஜராஜசோழன்**
(கலர்)

**வின்ஸர்** (யாழ்)
10-30 மட்டும்
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
**சிவப்பு சூரியன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-00, P. M.
ஜெய்சங்கர்
**துணிவே துணை**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
மு. கருணநிதியின்
**பூமாலை**

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

**லங்கா சீமெந்து**
**LANKA CEMENT**

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு
உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல்
உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'
முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து
உற்பத்தியாளர்கள்.

**'லங்கா சீமெந்து லிமிட்டட்'**
**LANKA CEMENT LIMITED**

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது
'லங்கா சீமெந்து'
தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள
காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்




விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● இலங்கை நிலைகுறித்து இந்தியப் பிரதமர் ரஜீவ்

# அப்பாவிகள் படுகொலை!

# வடக்கின் நிலை மோசம்!!

(புதுடில்லி)

**"இலங்கையின் வடபகுதியில் அப்பாவி மக்கள் பலர் ஆயுதப்படையினரால் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலனவர்கள்இந்தியப் பிரஜைகள்.**

**"வடக்கில் நிலைமை விரிவாக மோசமடைந்து வருகிறது."**

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி புதுடில்லியில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது "எமது அயல் நாடான இலங்கையில் தற்போது வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. முக்கியமாக தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்குப்பகுதிகளில் ஆயுதப்படையினர் டடுமோசமான முறையில் அப்பாவிதமிழ்மக்களைகொன்று வருகின்றார்கள். ஒன்றுமே அறியாத இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். கடந்த சில நாடகளில் சுமார் 400 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு பெயர் குறிப்பிடாத இடங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள். இந்த நிலைமைகள் அங்கு பெரும் பதட்ட நிலையை தோற்றுவித்துள்ளது.

இந்தியா இலங்கையின் ஒருமைப்பாட்டை மதிக்கின்றது. இந்த ஒருமைப்பாட்டின் அடிப்படையில் தமிழர்களின் நியாய பூர்வமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இந்தபிரச்னைகளை இலங்கை அரசாங்கம் விரைவில் தீர்த்து வைக்க வேண்டும்.என்றும் பிரதமரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ரஜீவின் கண்டனத்துக்கு பதில்!

[கொழும்பு]

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ் மக்கள் படுகொலைக்குள்ளாவது குறித்து இலங்கை அரசு மீது கண்டனம் தெரிவித்திருந்தார்.

இக் கண்டனத்தை இலங்கை அமைச்சரவை ஆராய்ந்தது. இறுதியாக திரு. காந்தியின் கண்டனத்துக்கு இலங்கையின் தற்போதைய நிலைமையை விளக்கிப் பதிலளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. [கி]

## லிபியா...

(3ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

ஓய்வுநாளும் இல்லாமல். மேலதிக வேலையும் இல்லாமலும் தொடர்ந்து லீவு இல்லாமல் 11 மாதங்கள் வேலைசெய்கின்றேம், மாதாமாதம் சம்பளம் வழங்கப்படுவதில்லை.

மேல் கூறப்பட்ட ஏஜன்சி இலங்கையில் எங்களுக்கு கீழ் காணும் பொய்களைச் சொல்லி இவ்விடம் அனுப்பினர்கள். I.O S.L கம்பனிக்கு விற்றார்கள் என்றே சொல்லலாம்.

சம்பளம்:-150 அமெரிக்க டொலர்

லீவு:- லிபியாச் சட்டப்படி வார ஓய்வு.

இரண்டுவருட முடிவில் 1200 அமெரிக்க டொலர்—போனஸ்

இங்கே வந்ததும் மேல் கூறிய விஷயங்கள் எங்களுக்குத் தரவில்லை. நினைத்த வேளையில்தான் எங்கள் சம்ளத்தை பெற்றோர்களுக்கு அனுப்புவார்கள் ஒழுங்காகச் சம்பளம் தருவதில்லை.

இங்கிலாந்து கம்பனிக்கும் லிபியா நாட்டு அரசுக்கு சொந்தமான அரேபியா குடா எண்ணெய் கம்பனிக்கும் இடையில் பிரகாரம் 150 லிபியா அரசுக்கு சொந்தமான எண்ணெய் கம்பனியில் சமயா சமய ஊழியர்களாக வேலை செய்கின்றேம். I. S. O. L. கம்பனியிடமே அரேபியன் குடா எண்ணெய் கம்பனி எங்கள் சம்பளத்தைகொடுக்கும். I. O. S. L எங்களுக்கு சம்பளம் தரும்

அரேபியாகுடா எண்ணெய் கம்பனி மாதம்ஒன்றுக்கு இலங்கையர் ஒருவருக்கு 36,000 ரூபா சம்பளமாக எங்கள் கம்பனிக்கு வழங்கும், மேல் கூறப்பட்ட 36,000 இலங்கை நாணயமாகும் I O S L 37,50 ரூபா பிச்சைசம்பளமாக வழங்கும்.

நாங்கள்படும் கஷ்டம் சொல்லமுடியாத கஷ்டம். 27,000 கட்டிவந்தோம் ஆனல் அதையே எடுக்கமுடியாத வாறுகஷ்டபடுகிறேம். எப்போது எங்கள் அடிமை விலங்கு உடையும் என்று ஏங்கின்றேம் இலங்கையில் இருந்து தைமாதம் தொழிலாளர்கள் வருவார் என்றும் எங்கள் கம்பனிக்கு வருவதாகவும் அறிகின்றேம் ஆகவே இலங்கை வாலிபர்களே, இங்கேவந்து ஏமாறுதீர்கள்.

## பாதுகாப்பு...

(3ம்பக்கம் 2ம்கலத்தொடர்ச்சி)

வளவு, வாகனம் அல்லது சாதனம் அரசு உடமையாக்கப்படலாம்.

(2) அவ்வாறு பாதிக்கப்படுபவர் கொழும்பிலுள்ள மேல் நீதிமன்றத்தில் தமதுபொருளை விடுவிக்கும்படி கோரி மனுச் செய்யலாம்.

(1) பாதுகாப்புவலயத்துக்குள் அல்லது வெளியில் வாசம் செய்யும் ஒருவர் தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்துமூலமான அதிகாரம் இருந்தாலன்றி ஒரு சீருடையை அல்லது பொலிஸ், ராணுவம், கடற்படை, அல்லது விமானப் படையின் உடைகள் போன்ற எதையும் தயாரிக்க, வைத்திருக்க, தைக்கமுடியாது

2. அவ்வாறான உடைகளைத் தயாரிப்பதற்கு எந்த ஒருவரும் தமது வளவை கொடுத்துதவுவதும் குற்றமாகும்.

## பாதிக்கப்பட்ட....

(2-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

கையில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பட்டியல்ஒன்றைத்தயாரித்தது சகலரும் அறிந்ததே சுமார் 230பேர் இப்பட்டியலில் இடம் பெற்று 1-1-85 முதல் இடமாற்றம் • செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இவ்விஷயம் தனித்தனி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இடமாற்றப் பட்டியல் தயாரிக்கும் போது பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் உட்பட சில விசேட சிபார்சுடனும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களது பட்டியல் 17-12-84 அளவில் சகலபிராந்தியகல்விக் கந்தோர்களுக்கும் அனுப்பப்படும். சகல ஆசிரியர்கள் தமக்குத் தனி தனி உறுதிப்படுத்தப் பட்ட கடிதத்துடன் குறிப்பிட்ட கல்விக் கந்தோர்களுக்கு சென்று பாடசாலைகளை நிர்ணயிக்க ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்தார்.

## கைதடி பெற்றேர்..

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

இராமலிங்கம், முன்ஞள் கைதடி கிச உறுப்பினர் திரு என் செல்லத்துரை மற்றும் கைதடியைச் சேர்ந்த ஆசிரியர்களும் வந்திருந்தனர்.

அரசாங்க அதிபரைச் சந்தித்த பின், திரு வி என் நவரத்தினம், தாய்மார்கள் முன்னிலையில் வந்து ஆகவேண்டியதைத் தாங்கள் கவனிப்பதாகவும், அவர்களை வீடு திரும்புமாறும் கேட்டுக் கொண்ட போது தாய்மார்கள் அதற்கு மறுத்து அவ்விடத்திலிருந்து கதறி அழுதனர்.

கைதடி பின்தங்கிய பகுதியிலிருந்து வந்த இத் தாய்மார்களில் அநேகர் ஏழைகள். 60 வயதுக்கு மேற்பட்ட தாய்மார்கள்தான் அதிகம். அதிகமானேர் குறுக்கை கட்டுகட்டியிருந்தனர்.

திரு. வி, என். நவரத்தினத்தின் கைகளைப் பிடித்து தோட்டத்தை கொத்திக்கொண்டிருந்த தன்மகனை பிடித்து சென்றுவிட்டார்களே என்று ஒரு வயோதிபத் தாயார் கதறினர். மற்றெரு தாயார் அவர் காலில் விழுந்து துடித்தார். எங்குபார்த்தாலும் ஒரே சோகமயமாகக் காடசியளித்தது. அவர்கள் பட்ட வேதனை நெஞ்சைப் பிளக்க வைத்தது.

திரு. நவரத்தினம் மீண்டும் அரசாங்க அதிபரைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

கைதடியில் 134 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

எங்கள் உயிரைக் கொண்டு சென்றுவிட்டார்கள் இந்த உடல் அங்கிருந்தாலென்ன இங்கிருந்தாலென்ன என்று ஒரு தாயார் தெரிவித்தார்.

நண்பகலுக்குப் பின்னர், தாய்மார்களுக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழியை தொடர்ந்து அவர்கள் வீடு திரும்பினர்கள்.

கைதான இளைஞர் சிறுவர்களுக்கு எவ்வித தீங்கும் நடைபெருதென்றும் அவர்கள்பற்றிய விபரங்களை சமர்ப்பிக்குமாறும் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. (க)

## இனப்பிரச்னை...

(1ம்பக்க 4ம் கலத்தொடர்ச்சி)

தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியுடனும் அமெரிக்காவின் விசேட தூதுவர் ஜெனரல் வேர்ணன் வோட்டர்ஸ் இலங்கையின் இனப்பிரச்னை குறித்து ஒரு மணித்தியாலம் கலந்துரையாடினர்.

அமெரிக்காவின் விசேட தூதுவர் ஜெனரல் வோட்டர்ஸ் இந்தியப்பிரதமரின் செயலாளர் திரு. கே. ஜி. அலெக்சாண்டரையும் சந்தித்து இலங்கையின் இனப் பிரச்னை குறித்துநீண்ட நேரம் கலந்துரையாடினர்.

## யாழ். நீதிமன்...

[1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி

விட்டதால், வழக்குகள் சம்பந்தப்பட்ட றிமாண்ட கைதிகள் நீதிமன்றம் கொண்டு வரப்படவில்லை.

இதே சமயம், யாழ் சிறைச்சாலைக்கு கைதிகள் றிமாண்ட் கைதிகளை அனுப்பவேண்டாமென்று பொலிஸர் மூலம், நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கைதிகளையோ, றிமாண்ட் கைதிகளையோ யாழ். சிறைச்சாலை ஏற்றுக்கொள்ளாது என்று அறிவிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

கடந்ததிங்கள் ஒரு பொலிஸ் சார்ஜன் மட்டும் நீதிமன்றம் வந்து உடனடியாக சென்று விட்டார். [க]

## அமர்ந்திருந்து...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

பிரதிகள் மாநாட்டில் கலந்து கொள்ளும் சகல குழுக்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த நகல்திட்டத்தை கூட்டணி ஆராய்ந்து வருகிறது.

மாநாட்டில் கலந்து கொள்வதுகுறித்து இன்றுமாலைதான் இறுதிமுடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், வடக்கின் தற்போதைய நிலையில் அமர்ந்திருந்து பேசும் நிலையில்நாம் இல்லைஎன்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்திருப்பதால் கூட்டணி கலந்துகொள்ளாது என்று நம்பப்படுகிறது.

## ஏமாற்றத்துடன் ..

[1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு வந்திருந்தனர்.

விண்ணப்பப்பத்திரங்கள் இன்னும் வந்துசேரவில்லை என்றும், அவை கிடைத்த கிடைத்த பின்னரே வினியோகிக்கப்படும் என உதவி அரசாங்க அதிபர் அவர்களிடம் தெரிவித்தார். இதே சமயம் வெளிக்கடைகளில் வாகனங்கள் செலுத்துவதற்கான விண்ணப்ப பத்திரங்கள் இரண்டு ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டன. இந்த விண்ணப்ப பத்திரங்கள் றேனியோ செய்யப்பட்டிருந்தன.

இந்த 'றேனியோ' செய்யப்பட்ட விண்ணப்ப பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படாதென்றும் அச்சடித்த விண்ணப்ப பத்திரங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

விண்ணப்பப்பத்திரங்கள் இன்னும் அச்சடித்து முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (க)

## பரீட்சையை குழப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள பல பாடசா களில் இன்று கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை நடைபெறவில்லை.

இனந்தெரியாத இளைஞர்கள் துப்பாக்கிமுனையில் பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்குச் சென்று வினப்பத்திரங்களை எடுத்துச்சென்றதைத் தொடர்ந்தே குறிப்பிட்ட நிலையங்களில் பரீட்சை நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)

## ஊரடங்கு நேரத்தில் தேடுதல் வேட்டை

(பண்டத்தரிப்பு)

இராணுவத்தினர் கடந்த செவ்வாய், புதன் ஆகிய ஊரடங்கு தினங்களில் பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை, சுழிபுரம், சித்சங்கேணி, அராலி இடங்களில் பலத்ததேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். ஊரடங்குச்சட்டம் நிலவிய இந்த இரு தினங்களிலும் கவசவாகனங்கள், ட்ரக்குகள், இ. போ. ச. பஸ்கள் ஆகியவற்றில் வந்து சேர்ந்த சுமார் 500க்கு மேற்பட்ட இராணுவத்தினர் வீடு வீடாக தேடுதல் நடாத்தி தூற்றுக்கணக்கான இளைஞர்களை கைது செய்து கொண்டு சென்றுள்ளனர். சில இளைஞர்கள் துப்பாக்கி சூட்டுனல் மரணமடைந்து விட்டதாகவும் அறியப்படுகின்றது. மாதகல் கத்திவெட்டுவான் என்ற இடத்தில் இருந்த சில இளைஞர்கள் மீது இராணுவத்தினர் சுட்ட போது இரு இளைஞர்கள் இறந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஹெலிகெப்டர் தாள்வாகப் பறந்து கண்காணிப்பில் ஈடுபட்டது இளம்பெண்கள் சிலரும் இராணுவத்தினரால் விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம்கடத்தப்பட்ட கார் சுழிபுரத்தில் வைத்து இராணுவத்தினரால் மீட்கப் பட்டது.

## கான்ஸ்டபிள்...

(1-ம் பக்க5ம்கலத்தொடர்ச்சி)

டையின் போது பொலிஸ் கான்ஸ்ரபிள் ஒருவரும், கைது செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

சுழிபுரத்தை சேர்ந்த கான்ஸ்டபிள் அவரின் வீட்டிலிருந்தபோது கைதாகி விசாரணைக்கு அழைத்துச் செல்லப் பட்டதாக கூறப்படுகிறது.

கல்லூரி அதிபர் ஒருவரும், கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPaper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org